பக்கங்கள்:-19

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 06 | வியாழக்கிழமை | 23.11.2023 | அதிர்வு 114 |
|---|---|---|---|---|---|


## 15 வயது மாணவன் மின்னல் தாக்கி பலி

பாடசாலை மாணவன் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை மாவட்டம், ஹொரணை – அங்குருவாதொட்ட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் 06▶

# ரணில் சந்தர்ப்பவாதி

## சபையில் சுமந்திரன் காட்டம்

### பேரினத்தாரின் மேலாண்மைக்கு அடிபணியோம் எனவும் சூளுரை



கோட்டா ஆட்சிக்கு எதிரான குழப்ப சமயத்தில் அதை சுமுகமாகத் தீப்பதற்கு எல்லாத் தரப்புகளுடனும் எட்டப்பட்ட இணக்க உடன்பாட்டுக்கு தானும் சம்மதித்து வந்துவிட்டு, பிரதமர் பதவி என்றதும் இணக்க நிலைப்பாட்டைக் கைவிட்டுக் கழன்ற சந்தர்ப்பவாதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற சாரப்பட நேற்றுத் தமது நாடாளுமன்ற உரையில் காட்டமாக வைதார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். 05▶

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்றும் 5 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்பு

(சண்முகம் தவசீலன்)



முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணி மீள ஆரம்பிக்கப்பட்டு நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நேற்றைய அகழ்வுப் பணியின் போது 5 மனித 07▶

## வீட்டின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்து இரண்டு யுவதிகள் பரிதாப உயிரிழப்பு



(ராமு தனராஜா)

கடும் மழை காரணமாக மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இரண்டு யுவதிகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலி – எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹாலி – எல, உடுவரை, 6ஆம் கட்டை மேற்பிரிவில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

நேற்று மாலை 5.20 மணியளவில் அந்த வீட்டில் இரண்டு யுவதிகள் இருந்த வேளை வீட்டின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததால் அவர்கள் இருவரும் பலத்த காயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று 06▶

### இளைஞரின் மரணம் தொடர்பில் சாட்சியம் வழங்க

## சட்ட வைத்திய அதிகாரி, சிறை அத்தியட்சகர் ஆகியோருக்கு நீதிமன்றம் அழைப்பாணை!




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞரின் உயிரிழப்பு தொடர்பில் சாட்சியம் வழங்க யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய 07▶




வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் காவலில் மோசமாக நடத்தப்பட்ட சித்தன்கேணி இளைஞன் பின்னர் உயிரிழந்தமை தொடர்பான விடயம் இப்போது நீதிமன்ற விசாரணையில் இருக்கின்றது.

ஆகையினால் அது பற்றிய விடயங்களை நாம் கண்மூடித்தனமாக விமர்சிப்பது, கையாள்வது நீதிமன்ற விசாரணைகளுக்குச் சிக்கலை ஏற்படுத்தி விடலாம். அது தொடர்பில் நாம் கண்மூடித்தனமாக, 06▶




# சனத் நிஷாந்தவுக்கு 2 வாரங்கள் சபை அமர்வில் பங்கேற்கத் தடை


ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் இரா""ஜாங்க அமைச்சருமான சனத் நிஷாந்த, நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கு நேற்றிலிருந்து இரண்டு வாரங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் பிரகாரம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவால் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

“இன்று (நேற்று) முதல் இரு வாரங்களுக்கு சனத் நிஷாந்தவின் நாடாளுமன்ற சேவைக் காலத்தை இடைநிறுத்த உத்தரவிடுகின்றேன்” – என்று சபாநாயகர் சபையில் நேற்று குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் ஒழுக்கமற்ற விதத்தில் செயற்பட்டதாலேயே அவருக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றும்போது, அவர் முன்னால் சென்று, ஒலிவாங்கியை மடக்கி, ஆவணத்தையும் சனத் நிஷாந்த பறித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, இந்த வருடத்துக்கான உயர்தரப் பரீட்சை 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு நேற்று உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், இது தொடர்பான மற்றொரு மனு மனுதாரர்களால் வாபஸ் பெறப்பட்டது.

இதையடுத்தே பரீட்சைகள் திணைக்களம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

## RUHBINS HOSPITAL (PVT) LTD.

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

NOVEMBER 14

# WORLD DIABETES DAY

## DIABETES IS A SILENT KILLER

Approximately 463 M + From the World Population

Over 2 M Sri Lankans are Diabetes

Every 6 seconds One person dies due to Diabetes



### Access to Diabetes Care

### WELLNESS PACKAGE

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

Special Offer

**Rs. 5,500/-**

Offer valid till Dec 14th

Hotline: +94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகோள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

## ரணில் சந்தர்ப்பவாதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“அதிக எண்ணிக்கையின் காரணமாக, நீங்கள் எங்கள் உரிமைகளை மிதித்துவிடலாம் என்று நினைத்தால் அது சரிவராது. நாங்கள் தலை சாய்க்க மாட்டோம். பெரும்பான்மை ஆட்சியை ஏற்க மாட்டோம். இந்த நாட்டில் கடைசி நபர் வாழும் வரை நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.” – என்றும் தமது நேற்றைய நாடாளுமன்ற உரையில் சுமந்திரன் சூளுரைத்தார்.

சுமந்திரன் தமது உரையில் கூறியவை வருமாறு:-

“நாங்கள் இதுவரை ஒரு சுவாரஸ்யமான விவாதத்தை நடத்தியுள்ளோம், ஜனாதிபதியும் அதில் பங்கேற்றார்.

இங்கு பரிசீலனையில் உள்ள நிறுவனங்களில் ஒன்று அரசமைப்புச் சபை. அது குறித்துவ முன்னும் பின்னுமாக இன்று பல விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால், நான் இன்னும் அடிப்படையான பிரச்சினை ஒன்றை எழுப்ப விரும்பு-கின்றேன்.

### அரசமைப்புச் சபை சர்ச்சை

அரசமைப்புச் சபையில் ஒரு வெற்றிடம் உள்ளது. பத்து உறுப்பினர்களும் நியமிக்கப்படவில்லை. இது மிகவும் தீவிரமான பிரச்சினை. இது எங்களுக்கு மிகவும் தீவிரமான பிரச்சினை. ஓர் உறுப்பினரை நியமிப்பதற்கான உரிமை எமக்கு இருந்ததாலும், அதற்கான ஒரு கூட்டம் நடத்தப்பட்டதாலும், சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனை அரசமைப்புச் சபைக்கு நான் பிரேரித்தும் இன்றுவரை அவர் அர-சமைப்புச் சபைக்கு நியமிக்கப்படவில்லை.

இதை நாங்கள் பலமுறை எழுப்பியுள்ளோம். எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்திலும், கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் எழுப்பியுள்ளார். அது எங்களின் உரிமை என்று சபாநாயகர் தெளிவாக கூறியுள்ளார்.

உண்மையில் தமக்கு (அந்த இடத்துக்கு நியமிக்கும்) உரிமை இருப்பதாகக் கூறும் ஏனையவர்கள் அனைவரும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள். ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் அவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் என்று எழுத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். அவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்காத பட்சத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்க முடியாது. எனவே, அந்த இடத்துக்கு அவர்கள் உரிமை கோர முடியாது. இந்த உறுப்பினரை அரசமைப்புச் சபைக்கு நியமிக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை.

இது வெறும் தொழில்நுட்பச் சிக்கல் இல்லை. இதன் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியும், எதிர்க்கட்சியில் இரண்டாவது பெரிய கட்சியுமான நமக்கு அரசமைப்புப் பேரவையின் பங்கேற்கும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

### தீர்வு பற்றிக் கூறும் ஜனாதிபதியால் ஒன்றையும் தீர்க்க முடியவில்லை

தான் முதலில் பிரதமராகவும், பின்னர் ஜனாதிபதியாகவும் பதவியேற்ற காலத்திலிருந்து தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தாம் தீர்வு காண்பார் என ஜனாதிபதி கூறுகின்றார்.

அதற்காக – அந்த நோக்கத்திற்காக – அவர் மூன்று அனைத்துக் கட்சி மாநாடுகளை நடத்தினார். ஒன்று கடந்த ஆண்டு. மற்றும் இரண்டு இந்த ஆண்டு.

ஆனால், இந்தச் சபையில் இந்த ஒரு பிரச்சினையைக் கூட அவரால் தீர்க்க முடியவில்லை. இந்த அவையாலும் கூட தீர்க்க முடியவில்லை. இது ஒரு பொருட்டல்ல. அரசமைப்புச் சபையில் இருந்து எங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வு காண்பதாகப் பேசுகிறீர்கள். அதை எப்படிச் சாத்தியம்? உங்களால் அந்தக்காலியிடத்தைக் கூட நிரப்ப முடியவில்லை.

இப்போது சில நாள்களுக்கு முன்பு இவ்விடயம் ஒரு தீவிர கவனத்திற்கு வந்துள்ளது. அரசமைப்புச் சபையில் ஒரு முட்டுக்கட்டை நிலைமை உள்ளது, இது அனைவருக்கும் தெரியும். ஓர் இருக்கை இன்னும் காலியாக இருக்கும்போது முட்டுக்கட்டை நிலை. அதை நிரப்பியிருந்தால் முட்டுக்கட்டை நிலைமை இருந்திருக்காது.

இந்த நாட்டில் அனைவரும் சமம் என்றும், அனைவருக்கும் சமமான பிரதிநிதித்துவம் உண்டு என்றும் வியாக்கியானம் கூறும் நீங்கள் மிக முக்கியமான அமைப்பான அரசமைப்புச் சபை போன்ற ஓர் அமைப்பில் எங்களின் இடத்தைப் பறித்துள்ளீர்கள் என்பதை இந்த முழு நாடும் அறிந்திருக்க வேண்டும். அப்படியான நீங்கள் எப்படி யாரையாவது எதிர்கொண்டு, முகம் கொடுத்து இது சரியான ஆட்சி என்று கூற முடியும்?

எனவே, இன்று நான் இதை ஒரு தீவிரமான பிரச்சினையாக எழுப்புகின்றேன். இது வெறுமனே அரசமைப்புச் சபையின், வெற்றிடத்தை நிரப்புவது மட்டுமல்ல, அது ஒரு தீவிரமான தேசிய பிரச்சினையும் கூட.

இந்தநாட்டின்தேசியவாழ்க்கையிலிருந்துநாங்கள்வெளியேற்றப்பட்டுவிட்டோம். அரசமைப்புச் சபைக்கு வெளியே நாம் வைக்கப்பட்டுள்ளமை அதன் மற்றொரு பிரதிபலிப்பாகும்.

### எங்களை எங்களின் வழியில் செல்வதற்கு விட்டு விடுங்கள்

1972இல் முதல் குடியரசு அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட போது, அதை தன்னெழுச்சியான அரசமைப்பு என்று அழைத்தீர்கள். ஆனால், நாங்கள் வெளியில் விடப்பட்டோம். நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு அடிப்படைத் தீர்மானமும் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

சந்தர்ப்ப வசமாக, தற்செயலாக, தர்மலிங்கம் சித்தார்த்தனின் தந்தையார் வி.தர்மலிங்கம், அப்போது அவர் சமஷ்டிக் கட்சியின் – இலங்கை தமிழரசு கட்சியின் – நாடாளுமன்ற உறுப்பினர், அந்த அரசமைப்பின் அடிப்படைப் பிரேரணைகளுக்குத் திருத்தங்களை முன்வைத்தார். அந்த தீர்மானங்கள் ஒவ்வொன்றும் 84 க்கு 16, 82 க்கு 13 என பெரும்பான்மையாகத் தோற்கடிக்கப்பட்டது. அப்படித்தான் நாங்கள் வெளியேறினோம்.

அப்படித்தான் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் கைகோர்த்து 1976 இல் தமிழர் ஐக்கிய முன்னணியை ஆரம்பிக்க வேண்டியது எமது கட்சிக்கு அவசியமானது. அதுதான் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு வழிவகுத்தது.

எங்களுக்கு இடமளிக்க முடியாவிட்டால், எங்களுக்கு உரிய இடத்தை வழங்க முடியாவிட்டால், எங்களை எங்கள் வழியில் விட்டு விடுங்கள், நீங்கள் ஏன் எங்களைப் பிடித்து வைத்துக் கொள்கிறீர்கள் என்பதைத்தான் நாங்கள் சொன்னோம்.

எங்களுக்கு எங்கள் சொந்த வழி உண்டு. அதைத்தான் நாங்கள் சொன்னோம். அதுதான் மூன்று தசாப்த கால யுத்தத்திற்கு வழிவகுத்தது.

### நாம் அடி பணியோம்

ஆனால், நீங்கள் இன்னும் அதைச் செய்கிறீர்கள். இன்றும் நீங்கள் அதைத்தான் செய்கிறீர்கள். ஒரு வருடத்திற்கும் மேலாக, எங்களை அரசமைப்புச் சபையில் இருந்து வெளியேற்றினீர்கள். இனிமேலும் இதனை இந்தச் சபையில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. நாங்கள் பிச்சைக்காரர்கள் அல்லர். இதையும் அதையும் கொடுங்கள் என்று கெஞ்சுவதற்கு. நாங்கள் இந்த நாட்டில் பிச்சைக்காரர்கள் அல்லர். நாம் ஒரு மக்கள் குழுமம். நாங்கள் பாரம்பரியம் கொண்ட மக்கள். இந்த நாட்டில் மற்றவர்கள் யாவருக்கும் முந்தியிருந்து வாழ்கின்றோம்.

உங்களின் அதிக எண்ணிக்கையின் காரணமாக, நீங்கள் எங்கள் உரிமைகளை மிதித்துவிடலாம் என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் தவறாக நினைக்கிறீர்கள், நீங்கள் முற்றிலும் தவறாக நினைக்கிறீர்கள். இதுபோன்ற முயற்சிகளுக்கு நாங்கள் தலை சாய்க்க மாட்டோம். பெரும்பான்மை ஆட்சியை ஏற்க மாட்டோம். இந்த நாட்டில் கடைசி நபர் வாழும் வரை நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

### இது முக்கிய வாரம்

இது ஒரு முக்கியமான வாரம். எங்களுக்காகப் போராடியவர்களுக்காக நாம் அவர்களை கௌரவிக்கும் வாரம் இது. அந்த வகையில் அதை வெளிப்படுத்துவதற்கு நான் தயங்க மாட்டேன்.

ஏன் அவர்கள் எங்களுக்காகப் போராடினார்கள்? ஏனென்றால் தேசிய நீரோட்டத்தில் இருந்து – வாழ்க்கையில் இருந்து – (உங்களால்) நாம் தூக்கி வீசப்பட்டோம். எங்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

நாம் அந்தச் சிந்தனையில் இப்போது இல்லை. ஐக்கியப்பட்ட, பிளவுபடாத, பிரிக்கப்படாத, ஒன்றுபட்ட நாட்டுக்குள் சேர்ந்து வாழ்வதற்கு நாங்கள் இன்னும் தயாராகவே இருக்கின்றோம் என்பதை நாம் மிகத் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கின்றோம். அதற்கு உங்கள் பிரதிபலிப்பு எப்படி இருந்தது? எப்படி இருக்கின்றது? முடிவு உங்களின் கைகளில். நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். எங்களை எப்போதும் இப்படி தனித்து நீங்கள் ஒதுக்கி விட முடியாது.

எங்களுக்காகப் போராடியவர்களின் மறைவை அவர்களின் உறவுகள் வடக்கு, கிழக்கில் நினைவுகூரும் இச்சமயத்தில், எங்களை நீங்கள் ஒதுக்கித் தள்ளி விட முடியாது என்பதை மீண்டும் குறிப்பிடுகின்றேன்.

அதிக எண்ணிக்கை உங்கள் பக்கம் இருப்பதால் மட்டும் உங்கள் கருத்து சரி என்று ஆகிவிடாது. அத்தகைய அதிக எண்ணிக்கை பல சமயங்களில் உங்களைத் தவறானவர்களாக – பிழையானவர்களாகச் செயற்பட வைத்து விடும்.

**(6ஆம் பக்ககம் பார்க்க...)**

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி...)
பொறுப்பின்றி செய்திகளைப் பிரசுரிப்பது நம்மையும் நீதிமன்றப் படியேற வைத்துவிடும்.

ஆகையால் பொறுப்புடனும் பொறுமையுடனும் சில விடயங்களைக் கேள்விகளாகக் கோடி காட்டுகிறேன். பொலிஸ் காவலிலிருந்து நீதிமன்றக் காவலுக்கு மாற்றப்பட்டு, விளக்கமறியிலிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர், சிகிச்சைக்கு மத்தியிலேயே இளைஞன் உயிரிழந்திருக்கின்றான். இளைஞனின் மரணத்திற்கான காரணம் இன்னும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது என்றே யாழ். சட்ட வைத்திய அதிகாரியின் சான்றறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. அது தவிர, வேறு நம்பகரமான தகவல்கள் இன்னும் தெரிய வரவில்லை.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆர்வலர்கள் சிலர் எழுப்பி உள்ள கேள்விகளை மட்டும் தருகிறேன்.

+ ஆஸ்பத்திரியில் இரண்டு, மூன்று நாள்கள் சிகிச்சைக்கு இருந்த பின்னர் தான் இளைஞன மரணித்திருக்கிறான். இந்த இளைஞன் ஆஸ்பத்திரியில் தனது உடற் சுகவீனம் தொடர்பில் செய்த முறைப்பாடுகள் என்ன? அதற்கு அளிக்கப்பட்ட சிகிச்கைகள் யாவை? இந்த இளைஞனின் சிகிச்சைகள் தொடர்பில் ஆஸ்பத்திரியின் அவதானிப்பு என்ன?

+ இந்த இளைஞன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னரும், பின்னரும் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் முன்னரும் வேறு ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு செல்லப்பட்டனா? பொலிஸ் விசாரணையில் மிக மோசமான நடவடிக்கைக்கு இளைஞன் உட்பட்டிருந்தான் எனக் கூறப்பட்டாலும், அதன் பின்னர் நீதிமன்றத்தில் அவன் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கின்றான். தான் மிக மோசமாக நடத்தப்பட்டமை குறித்து இளஞன் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர முடியாமல் போனமை எங்ஙனம்? இத்தகைய விடயங்களை நீதிமன்றம் அவதானிக்க முடியாத வகையில் பொலிஸ் கையாள்கின்றது என்றால், நீதிமன்றங்கள் இன்னும் விழிப்புடன் செயலாற்ற வைப்பது எஙஙனம் என்பது ஆராயப்பட வேண்டும்.

இப்படி விடைகள் இல்லா இன்னும் பல கேள்விகள் உண்டு. நாளை இந்த விடயத்தின் வழக்கு விசாரணைக்கு வந்த பின்னர் சட்டச் சிக்கல் இல்லாமல் இருந்தால் அதைப் பற்றிய விடயங்களை - விவரங்களை - பின்னர் தருகிறேன்.

## ரணில் சந்தர்ப்பவாதி...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)
நீங்கள்உங்கள்எண்ணிக்கையைவைத்து எங்களை முற்றாக அழித்து விடலாம் என்று நினைக்கின்றீர்கள். அதைத் தான் இந்தச் சபையிலும் கூட நீங்கள் செய்கின்றீர்கள்.

### ஜனாதிபதியின் நடத்தை மிகவும் வெட்கக்கேடானது

நான் வேறு ஒரு விடயத்தையும் இங்கு சரியாகக் கூற வேண்டும். அரசாங்கத்தை அமைக்க எதிர்க்கட்சித் தலைவரை அழைத்தனர், ஆனால் அவர் அதைச் செய்யவில்லை, அது மக்களின் நம்பிக்கையை மீறுவதாகும், அது தவறு என்று ஜனாதிபதி இங்கு கூறினார்.

ஆனால் ஜனாதிபதி கூறியவைதான் தவறு. ஜனாதிபதி இன்று பல முனைகில் தவறு செய்தார். அரசமைப்புச் சபையை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியாக அவர் இங்கு வர்ணித்தபோது, அவர் தவறு செய்தார். சபாநாயகர் தலைமை தாங்கும் நிர்வாகத்தின் ஒரு பகுதி உங்களிடம் இல்லை, அது சட்டமன்றக் கட்டமைப்பின் ஒரு பகுதியாகும்.

அந்த நியமன நேரத்தில் முழு எதிர்க்கட்சியும் ஏதோ ஒன்றை ஒப்புக்கொண்டது. அத்துடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் உருவாக்கப்பட்ட தேசியத் திட்டமான ஆவணம் ஒன்றும் இருந்தது. அதன்படி, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு குறிப்பிட்ட காலக்கெடு வழங்கப்பட்டது. அதனால் அவர் கௌரவமாக வெளியே செல்ல, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும், அதற்கு அவர் சம்மதித்தால் எதிர்க்கட்சித் தலைவர் பிரதமராக பதவியேற்பார். அதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம். ஒரு கட்சியாக நாங்கள் அதற்கு ஒப்புக்கொண்டோம். ஜே.வி.பி. அதற்கு ஒப்புக்கொண்டது. ஐக்கிய மக்கள் சக்தி அதற்கு ஒப்புக் கொண்டது. தனியொரு உறுப்பினராக அவரும் (ரணிலும்) அதற்கு ஒப்புக் கொண்டார்.

(ஆனால் இணங்கிய அந்த ஏற்பாட்டைக் குழப்பி) அவர் பிரதமராகப் பதவியேற்றதும், இது வெட்கக்கேடான செயல் என்று இந்தச் சபையில் முதல் ஆளாக நானேசொன்னேன்.அவர்அதைக்குறித்து மிகவும் வருத்தப்பட்டார். ஆனால், உண்மையில் இது அவரது வெட்கக்கேடான நடத்தை. அனைத்து எதிர்க் கட்சிகளும் இணைந்து எடுத்த ஒப்பந்தத்தை அவர் மீறினார். மேலும் அந்த ஒப்பந்தத்தை மீறி, அக்குழப்ப நிலையைப் பயன்படுத்திய ஒரு நபராக ஓடி வந்து அந்த அலுவலகத்தை எடுத்துக் கொண்டார்.

எனவே நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பாதுகாக்க இங்கு பேசவில்லை. ஆனால், ஒரு முழு வருடத்திற்குப் பிறகும் நான் சரியான பதிவை வைக்க வேண்டிய நேரம் இது என்று நினைக்கின்றேன். கதவில் ஓட்டையைக் கண்டதும் அந்த ஒப்பந்த இணக்கத்தை ஜனாதிபதியால் மீறினார். அவர் சந்தர்ப்பவாதி. அவர் அங்கு மெல்ல முதலில் கால் பதித்து, அங்கு நுழைந்து, இந்த நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியானார்.

1996 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டையில் அவரது தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. இப்போது அதைப் பற்றி அவர் எதுவும் பேசவில்லை. இப்போது அதைப் பற்றி பேசவில்லை.

### ராஜபக்ஷ வெளியேற வேண்டும்

பொதுமக்களின் நம்பிக்கையை மீறுவது மிகவும் தீவிரமான விஷயம். இன்று அவர் அளித்த பதில் ஒன்றும் இல்லை. நீங்கள் மக்களின் நம்பிக்கையை மீறியிருந்தால், அது நாட்டின் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாக இருந்தால், அந்த நபர்களுக்கு இந்த சபையில் உட்கார தார்மீக உரிமை இல்லை.

முதிர்ச்சியடைந்த ஜனநாயகம் உள்ள வேறு இடங்களில், ஜனநாயகத்தை மதிக்கும் இடத்தில், சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் இடத்தில், மக்கள் நம்பிக்கையை மீறியதாகக் கண்டறியப்பட்டவர்கள் மறுநாள் இராஜிநாமாச்செய்திருப்பார்கள். ஆனால், ராஜபக்ஷக்கள் அப்படியானவர்கள் அல்லர். பொது நம்பிக்கை மீறியதாக இருந்தாலும் சரி, எதையெல்லாம் மீறியிருந்தாலும் சரி, அவர்கள் இரண்டுக்குமான கூச்சல்களைப் பொருட்படுத்துவதில்லை.

தங்களின் குடும்பம் மற்றும் தாங்கள் இந்த நாட்டிலிருந்து கொள்ளையடித்தவை பற்றி மட்டுமே அவர்கள் கவலைப் படுகின்றார்கள். அவர்கள் அப்படியே இருக்க முடியும். ஆனால் அவர்கள் இந்த நேரத்தில் கூட சட்டத்தின் ஆட்சியை மதிக்க வில்லை என்றால், இந்த நாட்டின் குடிமக்களின் கடுமையான கோபத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பொறுப்பை ஏற்றுக்கொண்டு இந்தச் சபையை விட்டு வெளியேற வேண்டும். இந்த அவையில் மக்கள் பிரதிநிதிகளாக தொடர அவர்களுக்கு உரிமை இல்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்ற ஒருவரே அங்கு இருக்கின்றார், ஆனால் அவர் பதவி விலக வேண்டும், அவருக்கு கண்ணியம் இருந்தால், அவர் சட்டத்தை மதிக்கின்றார் என்றால், அவர் பதவி விலக வேண்டும்.

### ரணிலின் மாற்றம்

அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களே!

2015 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில், நீங்கள் அத்தியாயங்கள் கணக்கில் பேசினீர்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செலவீனங்கள் அவரது முன்னோடிகளுடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட பாதியாக அப்போது குறைக்கப்பட்டது என்பது எனக்கு நினைவிருக்கின்றது. ஆனால் இன்று நாம் பார்ப்பது அதுவல்ல. ஜனாதிபதியின் செலவு கடந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் இருந்ததை விட மிக அதிகம். எனவே, செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் சம்பந்தமாக கூட அவரது பார்வையில் ஒரு பெரிய மாற்றத்தை நாம் காண்கிறோம்." - என்றார்.

## 15 வயது மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
15 வயதுடைய மாணவனே பலியாகியுள்ளார்.

இதேவேளை, சீரற்ற காலநிலையால் பலத்த மின்னல் தாக்கம் தொடர்பில் 5 மாகாணங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வீட்டின் மீது மண்மேடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)
ஹாலி - எல பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 20 மற்றும் 23 வயதுகளையுடைய யுவதிகள் இந்த அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளனர்.

இருவரும் உறவினர்கள் என்றும், அவர்கள் அனர்த்தம் இடம்பெற்றபோது ஒரே வீட்டில் தங்கியிருந்தார்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இருவரின் சடலங்களும் பதுளை போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை ஹாலி - எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சுமந்திரனின் திட்டம் யாது?

சொல்லுவது இலகு. செய்வது கஷ்டம்.

வாயால் வெட்டி வீழ்த்தும் பலராலும் செயலில் செய்து காட்ட முடிவதில்லை.

'சொல்வதையே செய்வோம் செய்வதையே சொல்வோம்' என்று இன்று பல தலைவர்கள் கூறினாலும், தமிழர் தரப்பில் சொன்னதையே செய்து, செய்வதையே சொன்னவர்கள் வரிசையில் முன்னிலையில் இருப்பவர் தலைவர் பிரபாகரன்.

தமது இலட்சியம் மீதான பற்றுறுதி, விடா முயற்சி, திட சங்கற்பம் என்பன அவரைப் புடம் போட்டு ஒப்பாரில்லாத தலைவனாக உயர்த்தின.

'போராட்டம் வெடிக்கும்!', 'போராட்டம் வெடிக்கும்!' என்று வேறு சிலர் அவ்வப்போது சூளுரைத்தார்கள். அது வெறும் வாய்க்கு மெல்லுவதற்கு போட்ட அவல் விவகாரங்கள். அவ்வளவுதான்.

தலைவர் பிரபாகரன் வன்வலுவில் நம்பிக்கை வைத்தார். அதையே கையாண்டார்.

அந்த வரிசையில் நம் தலைவர்கள் இடையே ஒருவர் மென்வலு குறித்து அவ்வப்போது பிரஸ்தாபித்து வந்தார். எல்லோருக்கும் நன்கு தெரிந்தவர்தான். சுமந்திரன் எம்.பிதான் அவர்.

இப்போது அவரும் சூளுரைத்திருக்கின்றார். அதுவும் நாடாளுமன்றத்தில். வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் மாவீரர் வாரம் உணர் வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படும் நிலையில், அது குறித்தும் குறிப்பிட்டவாறு நாடாளுமன்றத்தில் தமது கருத்தை முன் வைத்திருக்கிறார் சுமந்திரன்.

அவரது சூளுரைப்பு சிங்களத் தலைவர்களை நோக்கி ஆங்கிலத்தில் அமைந்திருக்கின்றது.

"உங்களின் அதிக எண்ணிக்கை காரணமாக நீங்கள் எங்கள் உரிமைகளை மிதித்து விடலாம் என்று நினைத்தீர்களானால் நீங்கள் தவறாக எடை போடுகிறீர்கள் என்று அர்த்தம். முற்றிலும் தவறாக எடை போடுகிறீர்கள். இது போன்ற எத்தனங்களுக்கு நாங்கள் தலை சாய்க்க மாட்டோம். அடிபணிய மாட்டோம். இந்த நாட்டில் கடைசி நபர் வாழும் வரை நாங்கள் அதை (மேலாண்மை அடக்கு முறைத் திணிப்பை) ஏற்றுக் கொள்ள மாட்டோம்" - என்ற சாரப்பட சுமந்திரன் நாடாளுமன்றத்தில் நேற்று கூறி இருக்கின்றார்.

பெரும் எண்ணிக்கை என்ற வலிமையை - மேலாண்மையை - பயன்படுத்தி, எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களாகிய எங்களை சிங்களம் அடக்க முன்றால் அதற்கு நாம் அடங்கோம் என்பதுதான் சுமந்திரனின் கருத்து.

சரி, அடங்காமல் எதிர்த்து நிற்பதற்கு என்ன வழிமுறைகளை - திட்டங்களை - வழிகாட்டல்களை - சுமந்திரன் எம்.பி. வைத்திருக்கின்றார் என்ற கேள்வி எழுகின்றது.

வெறுமனே நாடாளுமன்ற உரைகளையும், நீதிமன்ற சட்ட வாதங்களையும் வைத்து இவ்விடயங்களில் தலை சாய்க்காமல் உறுதியுடன் நிமிர்ந்து நிற்க முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

சுமந்திரன் தமது ஆயுதமாகக் கோடி காட்டும் மென்வலுவைப் பயன்படுத்துவதற்கு கூடக் காத்திரமான எண்ணிக்கையில் மக்கள் பங்களிப்பது அவசியம்.

வன்முறை வடிவங்களையோ, ஆயுதப் போராட்டங்களையோ, ஏற்றவரோ, நாடியவரோ, அங்கீகரித்தவரோ அல்லர் சுமந்திரன்.

அப்படியாயின் எண்ணிக்கையில் பேரினமான சிங்களத்தின் அடக்குமுறைக்கு இணங்காது, தலைசாய்க்காது, உயிர்ப்போடு நின்று அதனை எதிர்கொள்ள சுமந்திரன் வைத்திருக்கும் தந்திரோபாயம் யாது?

தமது சூளுரை, வெறும் வாய்ச் சவடால் பேச்சாக அடங்கிப் போய் விடாமல் - அடங்கிப் போகவிடாமல் - அதை நிஜத்தில் முன்கொண்டு செல்லத் தம்வசம் இருக்கும் திட்டத்தை அவர் வெளிப்படுத்துவதற்கு இது பொருத்தமான சமயம்தான்.

## சட்ட வைத்திய அதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரி, யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோரை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் நாளை முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் சந்தேகநபராகக் கைது செய்யப்பட்ட சித்தங்கேணியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், பொலிஸாரால் கொடூர சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட போது உயிரிழந்தார் எனக் கூறப்படும் வழக்கு விசாரணையில் சாட்சியமளிக்கவே இருவரும் யாழ். நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## கொக்குத்தொடுவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாகத் தோண்டி எடுக்கப்பட்டன. அத்துடன் துப்பாக்கிச் சன்னங்களும் மீட்கப்பட்டன.

இந்த மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 24 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் துப்பாக்கிச் சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்திய இலக்கத் தகடுகள் மற்றும் உடைகள் உள்ளிட்ட சான்றுப்பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!"

- கௌதம புத்தர்






# நல்லூரில் வீசுகிறது ‘கார்த்திகை வாசம்’!

வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஆண்டு தோறும் “கார்த்திகை வாசம்” என்ற பெயரில் நடாத்திவரும் மலர் கண்காட்சி நேற்றுப் பிற்பகல் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமானது.

தமிழ்த் தேசியப் பசுமை இயங்கத்தின் ஏற்பாட்டில் தாவர உற்பத்தியாளர்களும் இணைந்து நடத்தும் இந்தக் கண்காட்சி இந்த மாதம் 30ஆம் திகதி வரை தினமும் காலை 8:30 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், சமூக அரசியற் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.















# யாழில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

## உடைமைகளுக்குத் தீ வைப்பு





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் பெற்றோல் ஊற்றி உடைமைகளுக்குத் தீயும் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – ஒஸ்மானியா வீதியில் உள்ள வீடொன்றின் மீதே நேற்று முன்தினம் இரவு இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த வீட்டுக்கு மோட்டார் சைக்கிலில் வந்த இருவர் வீட்டின் கதவு, வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் என்பவற்றின் மீது பெற்றோலை ஊற்றித் தீ வைத்த பின்னர் வீட்டின் வளவுக்குள் பெற்றோல் குண்டு ஒன்றையும் வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முல்லைத்தீவில் நேற்று ஒருவர் இடியன் துப்பாக்கியுடன் கைது






(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு கொக்குளாய் பகுதியில் நேற்று உள்ளூர்த் தயாரிப்பு இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக பதிவுகளின்றி இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று மாலை 5 மணியளவில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குளாய் கிழக்கு பகுதியிலுள்ள வீட்டிற்குட் சென்ற பொலிஸார் வீட்டைச் சோதனை செய்த போது பதிவுகள் ஏதுமின்றி சட்டவிரோதமாக துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததன் பேரிலே 32 வயதுடையவர் இடியன் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிசார் மேற்கொண்டு வருவதுடன், விசாரணைகளின் பின்னர் நாளையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.

# இலண்டனில் தமிழீழத் தேசியக் கொடி நாள் நிகழ்வு

“தமிழீழத் தேசியக் கொடி நாள்” நிகழ்வு பிரித்தானியாவின் தலைநகரம் இலண்டன் மாநகரத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள் ஒன்றுகூடி மாவீரர் வாரத்தை வரவேற்றதுடன், போரில் உயிர்நீத்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தினர். அத்துடன், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு சர்வதேச நீதியையும் கோரினர்.

‘தமிழீழத் தேசியக் கொடி’ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் மாவீரர் வாரத்தின் முதல் நாளில் அங்கீகரிக்கப்பட்டது. அன்று முதல் இந்த நாளை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

பிரித்தானியாவால் பெருந்தொகையான மக்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டதுடன், மாவீரர் வாரத்தை முன்னிட்டு இந்த வாரம் முழுவதும் பல்வேறு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வு நாடு கடந்த தமிழீழ அரசால் உலக வரலாற்று மையத்துடன் இணைந்து அநேகமான தமிழ் மக்களுடன் நாடு கடந்த தமிழீழ அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள்,



உலக வரலாற்று மைய முக்கியஸ்தர்கள், பாலா மாஸ்டர் மற்றும் கவுன்சிலர் பரம் நந்தா ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறுவர்களின் கலாசார நடனங்களுடனும் பேச்சுக்களுடனும் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் அமெரிக்காவில் இருந்து நேரலையில் தொடர்பு கொண்டு சிறப்புரையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மனித சங்கிலிப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி விட்டார்கள்!

## ‘கார்த்திகை வாசம்’ மலர்க் கண்காட்சி உரையில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தலைவர் விசனம்



அகிம்சை ரீதியான போராட்ட வடிவங்களில் மிகவும் வலுவான போராட்டமான மனிதச்சங்கிலி போராட்டத்தின் அர்த்தத்தை சில அரசியல்வாதிகள் கொச்சைப்படுத்தி விட்டார்கள் என தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்

கார்த்திகை வாசம்“ மலர்க் கண்காட்சி த்தினால் மர நடுகை மாதத்தை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற “கார்த்திகை வாசம்“ மலர்க் கண்காட்சியின் நேற்றைய ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலுடன் எமது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது. அதற்கு பின்னர் நாம் இனித் துப்பாக்கி தூக்கிப் போராடக்கூடிய நிலைமையில் இல்லை. ஆனால் அதற்கு ஒத்ததாக அகிம்சை ரீதியாக போராட முடியும். ஆனால் அதனைத் தலைமை தாங்குவதற்கு – தலைமையேற்பதற்கு – யாரும் இல்லை. மக்களை சரியாக வழிபடுத்தவும் ஒழுங்கான தலைமை இல்லை.

உதாரணமாக நான் ஒன்றை கூற விரும்புகின்றேன். அண்மையில் ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் மனித சங்கிலி போராட்டம் என மருதனார்மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரை மனித சங்கிலி போராட்டத்திற்கு அழைப்பு விட்டார்கள்

ஆனால் அதில் கட்சி ஆதரவாளர்கள் கூட பங்குபற்றவில்லை. வீதியால் சென்றவர்கள் அந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் பங்கு பற்றியிருந்தாலேயே யாழ்ப்பாணம் வரைக்கும் அந்த மனித சங்கிலி போராட்டம் நீண்டிருக்கும்.

ஆனால் வீதியால் சென்றவர்களும் பார்வையாளர்களாகவே சென்றதன் காரணமாக அந்தப் போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டு, மனித சங்கிலி போராட்டம் தோல்வி அடைந்துள்ளது

அஹிம்சை ரீதியான போராட்டம் என்றாலும் சரி, ஏனைய போராட்டங்கள் என்றாலும் சரி, அவற்றைச் செயற்படுத்துவதற்கு ஒழுங்கான தலைமைத்துவம் இல்லை. இந்த மனித சங்கிலி போராட்டத்திற்கு அழைப்பு விட்டவர்கள் அதனை ஒழுங்கான முறையில் செயற்படுத்தவில்லை என்றே கூறலாம். நான் ஏற்கனவே குறிப்பிட்ட விடயம் ஒன்றினை குறிப்பிட விரும்புகின்றேன்.

காலையில் உண்ணாவிரத போராட்டத்தில் இருந்த ஒருவர் 11 மணியளவில் கல்வியங்காடு சந்தையில் மீன் வாங்க நிற்கின்றார். போராட்ட முடிவு நேரத்தில் அவரை உண்ணாவிரதப் பந்தலில் கண்டேன். இப்படியான தலைவர்கள் இருக்கும் நிலையில் எமது போராட்டங்கள் எவ்வாறு வெற்றியடையும்?

எமது மாவீரர்களின் வரலாறுகளை எதிர்கால சந்ததியினருக்கு இந்த மரநடுகை மாதத்தின் மூலமாவது நாக் கடத்த வேண்டும்.

நாங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு மரம் நடுவோம். கட்டாயமாக அது ஒரு நல்ல பயனைத் தரும். எனினும் எமது எதிர்கால சந்ததியினர் தற்பொழுது வெவ்வேறு துறைகளில் மோகம் கொண்டுள்ளார்கள். குறிப்பாக தென்னிந்திய சினிமா மற்றும் தென்னிந்தியக் கலைஞர்களை இங்கே கொண்டு வந்து கொண்டாடுதல் போன்ற பல்வேறு துறைகளில் மோகம் கொண்டுள்ளார்கள்.

அவ்வாறான எதிர்கால சந்ததியினருக்கு எமது கடந்த கால வரலாறுகளைக் கடத்துவதற்கு இந்த மரநடுகை மாதமானது ஓர் உதாரணமாகக் காணப்படுகிறது.

மர நடுகை மாதமானது கார்த்திகை மாதம் தான் செயற்படுத்தப்படுகின்றது.

அதேபோல எமது இனத்துக்காகப் போராடி மடிந்த மாவீரர்களின் நினைவேந்தல் நிகழ்வுகளும் கார்த்திகை மாதத்தில் தான் இடம்பெறுகின்றன. எனவே இந்த மரநடுகை மாதத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு எமது கடந்த கால வரலாறுகளை கடத்துவதற்கு இலகுவாக இருக்கும். – எனவும் தெரிவித்தார்.

# இன்னும் பத்து வருடங்களில் பிரபாகரன் யார் எனக் கேட்கக் கூடிய நிலையே இங்கு

## வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. கவலை



(எஸ்.நிதர்ஷன்)

இன்னும் பத்து வருடங்களில் தலைவர் பிரபாகரன் யார் எனக் கேட்கக்கூடிய நிலை தான் இங்கு காணப்படுகின்றது என்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் மர நடுகை மாதத்தை முன்னிட்டு நடத்தப்படும் கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்னும் பத்து வருடங்களில் தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் யார் எனக் கேட்கக் கூடிய நிலைமைதான் இங்கு காணப்படுகின்றது.

எங்கள் மக்களிடத்தில் மறதி என்கின்ற பண்பு வளர்ந்து வருகின்றது. இதன் காரணமாக மக்கள் பழைய விடயங்களை மறக்கின்ற நிலைமை காணப்படுகின்றது

குறிப்பாக ஐங்கரநேசன் என்பவர் ஒரு தமிழ்த் தேசிய உணர்வோடு நீண்ட காலமாகப் பயணித்து வருபவரால் இந்த மர நடுகை மாதம் ஆண்டு தோறும் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபை செயற்பாட்டில் இருந்தபோது ஐங்கரநேசன் விவசாய அமைச்சராக இருந்தபோது இந்தக் கார்த்திகை மாதத்தை மர நடுகை மாத மாகப் பிரகடனப்படுத்தி தீர்மானத்தை நிறைவேற்றினோம். எனவே, வடக்கு மகாண சபையின் அவைத் தலைவர் என்ற ரீதியில் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதில் எனக்கும் ஒரு பங்கு உண்டு.

ஆகவே, இந்த மர நடுகை மாதத்தை தீர்மானமாக நிறைவேற்றியதில் நானும் பங்காற்றி இருக்கின்றேன் என எனக்கு ஒரு சந்தோஷம் உள்ளது.

ஐங்கரநேசன் மாத்திரம் தற்போது இந்த மர நடுகைச் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றார். ஆனால், மாகாண சபை செயற்பாட்டில் இருந்த காலத்தில் இந்தச் செயற்றிட்டமானது வடக்கு மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. தற்போது அந்த நிலைமை மாறிவிட்டது. மர நடுகை தற்போது தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றது. அது ஐங்கரநேசனால் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஐங்கரநேசன் இந்த மண்ணுனுடைய மர நடுகை மைந்தனாக அந்தப் பெருமையோடு மேலும் இந்தக் கைங்கரியத்தை முன்னெடுப்பதற்கு இந்தச் சமூகம் அவரோடு இணைந்து பயணிக்க வேண்டும் ஆதரிக்க வேண்டும் ஒத்துழைக்க வேண்டும். இந்தப் பணியைத் தொடர்ச்சியாக அவர் முன்னெடுக்க வேண்டும்.” – என்றார்.

# பழங்குடி இன மக்களுக்கு காங்கிரஸ் உதவியதில்லை

## - பிரதமர் நரேந்திர மோடி குற்றச்சாட்டு




நாட்டின் பழங்குடி மக்களுக்கு காங் கிரஸ் கட்சி ஒருபோதும் உதவியது கிடையாது என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு துங்கர்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி உரை நிகழ்த் தினார்.

இதன்போது அவர் மேலும் தெரி விக்கையில்,

"ராஜஸ்தானில் இளைஞர்களின் கனவு நொறுங்கிப்போயுள்ளது. காரணம், காங்கிரஸ் கட்சியின் மோசமான ஆட்சி தான். கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்ற அனைத்து அரசுப் பணிகளிலும் காங்கிரஸ் கட்சி ஊழல் செய்துள்ளது. இது இளைஞர்களுக்குச் செய்துள்ள மிகப் பெரிய அநீதி.

மோசமான ஆட்சியை தந்துள்ள காங்கிரஸ் ஆட்சியை அகற்றுவதற்கான மிகப் பெரிய வாய்ப்புதான் இந்த தேர்தல். ஜனநாயகம் உங்களுக்குக் கொடுத்துள்ள மிகப் பெரிய வாய்ப்பு இது. சில நேரங்களில் நாம் செய்யும் சிறு தவறுகூட அடுத்த 5 ஆண்டுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும். அதுபோல் இல்லாமல், நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலின்போது காங்கிரஸ் ஆட்சியை அகற்றி, பா.ஜ.க. ஆட்சிக்கு வர வாக் களியுங்கள். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், மத்திய அரசின் அனைத்து திட்டங்களும் மிக வேகமாக ராஜஸ்தானில் அமுலுக்கு வரும். காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்து பா.ஜ.க. ஆட்சி தொடங்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

காங்கிரஸ் கட்சி ஏழைகளுக்கு எதிரானது. குறிப்பாக, நாட்டின் பழங்குடி மக்களுக்கு காங்கிரஸ் இதுவரை எந்த நன்மையையும் செய்யவில்லை. அவர் களுக்கு எந்த விதத்திலும் உதவவில்லை. ஆனால், பா.ஜ.க., பழங்குடி மக்கள் நலனுக்கு என தனி அமைச்சரவையே உருவாக்கியது. அதோடு, பட்ஜெட்டில் அவர்களுக்கு அதிக நிதியை ஒதுக்கியது." என்று தெரிவிவித்துள்ளார்.

---

# 300 கோயில் சிலைகளை தி.மு.க. அரசு மீட்டுள்ளது


## - அமைச்சர் சேகர்பாபு தெரிவிப்பு

தமிழகத்தில் தி.மு.க., மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் 200 உலோக தெய்வச் சிலைகள், 100 கற்சிலைகள் என மொத்தம் 300 கோயில் சிலைகள் மீட்டுள்ளது என தமிழக இந்து சமய அற நிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் சேகர்பாபு ஊடகவியலாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்,

திருக்கோயில் ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கும் பணி நடை பெற்று வருகிறது. ஆன்மிக புரட்சி களை தி.மு.க. அரசு செய்து வரு கிறது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த 2 ஆண்டுகளில் 1,443 கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட கோயில்களில் அறநிலையத்துறை சார்பில் 300 கோடி ரூபாவுக்கு மேல் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

100 கோடி ரூபாவில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கப்பட உள்ளது. கன்னியாகுமரி, புதுக்கோட்டை



தேவஸ்தானத்திற்கு 1 கோடி ரூபாவாக இருந்த மானியத்தை 5 கோடி ரூபா வாக உயர்த்தியுள்ளோம். இந்து சமய அறநிலையத்துறையில் உள்ள 200 இற்கும் மேற்பட்ட பணி வெற்றிடங் கள் நிரப்பப்பட்டுள்ளன. இந்து அறநிலை யத்துறை மீது திட்டமிட்டு அவதூறுகள் பரப்பப்படுகின்றன.

உளவுத்துறை நன்றாக செயல்பட்டு கொண்டிருப்பதால் தான் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு, ஜனநாயகம் காப்பாற்றப் பட்டுள்ளன. கோயிலில் பெட்ரோல் குண்டு வீசியவரை உடனடியாக கைது செய்துள்ளோம். உயரிய பொறுப் பில் உள்ளவர்கள் ஆதாரத்துடன் குற்றச் சாட்டுகளை கூறினால் அதன் மீது நடவடிக்கை எடுக்க தமிழக அரசு தயாராக உள்ளது.

எந்தக் கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் திருக்கோயில் விவகாரத்தில் அரசியல் செய்யக்கூடாது. தமிழகத்தில் இந்துகளுக்கு எதிரான ஆட்சி என்ற பிம்பத்தை உருவாக்க மத்திய அரசு முயற்சி செய்து வருகிறது.

இந்துகளுக்கு எதிரான ஆட்சி என நிறுவ முயன்று அதில் தோற்றவர்கள் அவதூறு பரப்புகிறார்கள். தமிழகத்தில் தி.மு.க., மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு 200 உலோக தெய்வச் சிலைகள், 100 கற்சிலைகள், 100 கலைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

# காசா போர் இடைநிறுத்தம்: அமெரிக்க ஜனாதிபதி மகிழ்ச்சி



ஹமாஸினால் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வரவேற்றுள்ளார்.

போர் இடைநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்குவந்தவுடன் வாரக் கணக்கான சிறைப்பிடிப்பு மற்றும் வேதனைகளை அனுபவித்த பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள், குடும்பத்தவர்களுடன் ஒன்றிணை வார்கள் என்பது குறித்து பெரும் மகிழ்ச்சியடைகிறேன் என பைடன் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்பாடு சாத்தியமாவதற்காக எகிப்தும் கட்டாரும் வழங்கிய மிக முக்கியமான தலைமைத்துவதிற்காக அவர் அந்த நாடுகளிற்கு நன்றி தெரி வித்துள்ளார்.

யுத்த இடைநிறுத்தத்திற்கு ஆதரவளிப்பது என்ற இஸ்ரேலிய பிரதமரின் அர்ப்பணிப்பையும் அவர் வரவேற்றுள்ளார்.

உடன்படிக்கையின் அனைத்து அம்சங்களும் முழுமையாக நடை முறைப்படுத்தப்படுவது அவசியம் என பைடன் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் - ஹமாஸ் போரில் பாதிப்புகளுக்கு நன்கொடை!

## - எக்ஸ் நிறுவனத்தின் தலைவர் தெரிவிப்பு

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் பாதிப்புகளுக்கு நன்கொடையாக எக்ஸ் வலைத்தளத்தின் வருமானம் வழங்கப்படும் என எக்ஸ் நிறுவனத்தின் தலைவரான எலான் மஸ்க் தெரிவித் துள்ளார்.

எக்ஸ் வலைத்தளத்தின் விளம்பரம் மற்றும் சந்தாதாரர்கள் மூலம் கிடைக்கும் வருமானம் போரில் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளை சீரமைக்கவும், காசாவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகவும் நன்கொடையாக வழங்கப்படும் என எலான் மஸ்க் குறிப் பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மீது ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு ஆயிரக் கணக்கான ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதற்கான பதில் தாக்குதலையும் இஸ்ரேல் தரப்பு



முன்னெடுத்து வருகிறது.

இந்த நிலையில் இஸ்ரேல் - ஹமாஸ் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையேயான மோதல் 47ஆவது நாளாகத் தொடர்ந்து நீடித்து வரு கிறது.

இந்த போரில் இதுவரை 13 ஆயிரத் திற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதுடன் 2,700 பேர் காணாமல் போயுள்ளனர். இஸ்ரேலில் 1,200 பேர் உயிரிழந்துள்ளனர்.


இந்த நிலையில், உலக பணக் காரர்களில் ஒருவரும் எக்ஸ் நிறுவனத் தின் தலைவருமான எலான் மஸ்க், எக்ஸ் வலைத்தளத்தின் விளம்பரம் மற்றும் சந்தாதாரர்கள் மூலம் கிடைக்கும் வருமானம், போரில் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளை சீரமைக்கவும், காசாவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகவும் நன்கொடையாக வழங்கப்படும் என கூறியுள்ளார்.

# தெற்கு பசிபிக் பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

தெற்கு பசிபிக் பகுதியில் 7 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் வனுவாட்டு பகுதியில் உணரப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் பூமியின் மேற் பரப்பில் இருந்து 10 கிலோ மீற்றர் ஆழத் தில் ஏற்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.





# அதிவேக வீதிகளில் பற்றுச்சீட்டு வழங்குவோர் பணிப்பகிஷ்கரிப்பு

அதிவேக வீதிகளில் பற்றுச்சீட்டு விநியோக கருமபீடங்களில் பணிபுரியும் அதிகாரிகள் பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளனர்.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து நேற்று காலை 7 மணி முதல் இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப் பட்டுள்ளது.

வீதிகளின் பாதுகாப்புப் பணிகளுக் காக முப்படையினர் அழைக்கப் பட்டுள்ளனர் என அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வீ.எஸ்.வீர கோன் தெரிவித்துள்ளார்.

பற்றுச்சீட்டு விநியோக நடவடிக்கை யும் பாதுகாப்பு பிரிவினரால் மேற் கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட் டார்.



# மலையக மார்க்கத்திலான ரயில் சேவைகள் பாதிப்பு

மலையக மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து நேற்று பாதிக்கப்பட்டது.

ஒஹிய – இதல்கஸ்ஹின்ன பகுதி களுக்கிடையிலான ரயில் பாதையில் மண்மேடு சரிந்துள்ளமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கொழும்பிலி ருந்து பதுளை நோக்கிப் பயணித்த இரவு தபால் ரயில் ஒஹிய பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப் பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மண்ணை அகற்றுவதற்காக இரா ணுவத்தின் ஒத்துழைப்பு கோரப்பட் டுள்ளதாக பதுளை மாவட்ட இடர் முகா மைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.



# ஓ.எல். பெறுபேறுகள் சில தினங்களில் வரும்

## பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை எதிர்வரும் சில தினங்களுக்குள் வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளுக்கான ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த உயர்தரப் பரீட்சையின் மீள்திருத்த பெறுபேறுகள், இந்த வாரம் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# கோட்டை நீதிமன்ற தலைமை பதிவாளர் மற்றும் இருவர் மீண்டும் விளக்கமறியலில்




கோட்டை நீதவான் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் உள்ளிட்ட மூன்று பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு – கோட்டை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களை அடுத்த மாதம் 5ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

போலி ஆவணம் தயாரித்த குற்றச்சாட்டில், தண்டனை விதிக்கப்பட்ட சந்தேகநபரின் வெளிநாட்டு பயணத் தடை நீக்கப்பட்டதாக போலி கடிதம் வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தின் தலைமை பதிவாளர் கைது செய்யப்பட்டிருந்தார்.




# ஐந்து மாகாணங்களுக்கு மின்னல் தாக்க எச்சரிக்கை

பலத்த மின்னல் தாக்கம் தொடர்பில் 5 மாகாணங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிக மழையுடனான வானிலையால் 798 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 930 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

9 மாகாணங்களில் பலத்த மழை பெய்து வரும் நிலையில், அனர்த். சம்பவங்கள் பதிவாகியுள்ளன என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளை, கம்பஹா, மாத்தறை கேகாலை இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் மாவட்டங்களை சேர்ந்த மக்கள் அதிக மழையால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர் என நிலையம் குறிப்பிட்டுள்ளது.

பலத்த மழையால் 3 வீடுகள் முழுமையாகவும் 116 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

11 பாதுகாப்பு முகாம்களில் 639 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பலத்த மின்னல் தாக்கம் தொடர்பில் 5 மாகாணங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீட்டருக்கும் கூடிய பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.



# வெள்ளவத்தையில் மாடியில் இருந்து தவறி விழுந்து இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, வெள்ளவத்தையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து தவறி விழுந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளவத்தை, ருத்ரா மாவத்தையில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு அந்த இளைஞர் தவறி விழுந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் அப்பகுதியில் வசிக்கும் 20 வயதுடையவர் எனவும், அவர் தனது பெற்றோருடன் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இளைஞரின் சடலம் அடுக்குமாடிக் குடியிருப்பின் பின் பகுதியில் இருந்து மீட்கப்பட்டது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் களுபோவில வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பிரேத பரிசோதனை நேற்று இடம்பெற்றது.



# வடக்கு, கிழக்கு கடற்றொழில்சார் அபிவிருத்திக்கு ஜப்பான் 30 லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடற்றொழில்சார் அபிவிருத்திகளுக்காக ஜப்பான் அரசாங்கம் முப்பது லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் MIZUKOSHI Hideaki மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த நிதி கடற்றொழிலாளர்களுக்கான குளிரூட்டல் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கான நவீன உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து இரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





# அஸ்வெசும கொடுப்பனவுகள் இன்று முதல் வழங்கப்படும்

அஸ்வெசும பயனாளர்கள் செப்டம்பர் மாதத்திற்கான கொடுப்பனவுகளை இன்று முதல் பெற்றுக்கொள்ள முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

13 லட்சத்து 77 ஆயிரம் பயனாளி குடும்பங்களுக்காக 8571 மில்லியன் ரூபாவை வங்கிகளுக்கு விடுவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகளை வருட இறுதிக்கு முன்பாக செலுத்தி முடிக்கவுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும திட்டத்திற்காக புதிதாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனிடையே முதியோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனமுற்றோருக்கான கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.11.2023




இன்று சீரான பலன்கள் கிடைக்காது. இன்றைய சில நிகழ்ச்சிகளில் பொறுமை இழப்பீர்கள். எனவே பொறுமையாக இருக்க வேண்டும். பிறருடன் பேசும் போது வார்த்தைகளில் கவனம் வேண்டும்.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். திட்டமிட்டு ஒழுங்கமைத்து பணியாற்றுவதன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றாலாம்.

நீங்கள் உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இந்தப் போக்கினால் இருவரிடையேயான உறவின் ஸ்திரத்தன்மை மற்றும் இனிமை பாதிக்கும்.

இன்று சீரான பணப்புழக்கம் காணப்படாது. சிறிய அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு காணப்படும்.

இன்று அஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவம் உதவிகரமாக இருக்கும்.




இன்று பணிகள் நிறைந்து காணப்படும். பல வாய்ப்புகளுக்கான அறிகுறி காணப்படும். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை நோக்கி செயல்படுவீர்கள். உங்களின் பேச்சாற்றல் மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள்.

பணி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. பணிகள் இறுக்கமாக காணப்படும். நீங்கள் அதில் மூழ்கி இருப்பீர்கள். பணியில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் உண்மையனா திறமை வெளிப்படும்.

நீங்கள் உங்கள் துணையிடம் வெளிப்படையாக உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமையில் சிறந்த வளர்ச்சி காணப்படும். கையிலுள்ள பணம் திருப்திகரமாக இருக்கும்.




இன்று உற்சாகமான தருணங்கள் காணப்படும். உங்களின் தைரியம் மற்றும் உறுதியான போக்கினால் பிரகாசமான வாய்ப்புகள் ஏற்படும். உங்கள் பேச்சாற்றல் மூலம் பலவற்றை சாதிப்பீர்கள். உங்கள் எதிரிகள் அடங்கி விடுவார்கள்.

நீங்கள் சிரத்தையுடன் உங்கள் திறமையைக் காட்டிப் பணி புரிவீர்கள். உங்களின் இந்தப் போக்கினால் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மிகவும் திருப்தியடைவார்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு தரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று செயல்பாடான நாளாக இருக்காது. நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள் என்பதால் இதனை தவிர்க்க வேண்டும். பிறருடன் பேசும்போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. பிரார்த்தனை மூலம் மன அமைதி பெறலாம்.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். இதனால் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. சிறப்பாக செயலாற்ற திட்டமிடல் வேண்டும்.

நீங்கள் மாறுபடும் மனநிலையுடன் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க இத்தகைய மனப்போக்கை கைவிட வேண்டும்.

நிதிநிலைமை போதிய அளவு காணப்படாது.




இன்று நன்மை தரும் விளைவுகள் காண சாதகமான நாள் அல்ல. உங்கள் பாதைகளில் சில தடைகள் காணப்படும். அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக நீங்கள் மதிப்பு மிக்க வாய்ப்புகளை இழப்பீர்கள்.

இன்று வெற்றிக்கான வாய்ப்புக்கள் குறைவு. உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும். சிறப்பான செயல் அதிர காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது அவசியம்.

சிறிய விஷயத்தையும் நீங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இதனால் உறவில் இனிமை பாதிக்கப்படும். காரணமின்றி உங்கள் துணையுடன் வாக்குவாதங்கள் செய்வீர்கள். இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

வீணான செலவுகள் ஏற்படலாம். கட்டுப்பாடற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று பிரகாசமான வாய்ப்புகள் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவீர்கள். உங்கள் புத்திசாலித் தனம் மற்றும் திறமை மூலம் லாபம் பெறுவீர்கள். திட்டமிட்டு உறுதியான அணுகுமுறை மேற்கொண்டால் நற் பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறனுக்கான வெற்றி கிடைக்கும். உங்கள் கடின உழைப்பின் மூலம் நீங்கள் பயன் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்களின் இந்தப் போக்கால் நீங்கள் நெருக்கமான உறவுப் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள இயலும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் சேமிப்பு நிலை உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் சுய வளரச்சிக்காக உங்கள் புத்தியை பயன்படுத்தி வெற்றி பெறுவீர்கள். நீங்கள் அதிக முயற்சியின்றி எளிதாக மேம்பட்ட முறையில் செயல்களை கையாள்வீர்கள்.

பணியைப் பொறுத்தவரை திருப்தியான நிலைமை காணப்படும். நீங்கள் சிறந்த தரத்துடன் பணியாற்றுவீர்கள். மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். சுமூகமான சூழ்நிலை காணப்படும்.

இன்று கணிசமான பண வரவு காண வாய்ப்புள்ளது. ஆன்மீக ஈடுபாடு கொண்டு உங்கள் சௌகரியங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.




இன்று உங்கள் இலக்குகளை அடைவது கடினமாக இருக்கும். வெற்றி பெறுவதற்கு முறையாக திட்டமிட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

அதிக பணிகளால் கவலை கொள்வீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நீங்கள் சிறப்பாக செயலாற்ற இயலாது.

உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்பட உணர்ச்சி வசப்படும் போக்கை கட்டுபடுத்திக் கொள்ள வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் உங்களிடம் கவலை காணப்படும்.

தூக்கமின்மையால் பாதிக்கப்படுவீர்கள். இதனால் கால் வலி மற்றும் முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.11.2023




இன்று உங்களிடம் திடமான நம்பிக்கையும் உறுதியும் காணப்படும். என்றாலும் சில கடினமான சூழ்நிலைகளை கையாளும் தைரியம் போதிய அளவு காணப்படும். நம்பிக்கை உணர்வோடு இருந்தால் நீங்கள் இவற்றை சமாளிக்கலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேரலாம். எனவே கவனமுடன் பணியாற்ற வேண்டியது அவசியம்.

குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் துணையிடம் கோபப் படுவீர்கள். இது இருவருக்கிடையேயான மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இதனால் நிதிநிலைமை சற்று சுமையானதாக இருக்கும்.




இன்று நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டிய கடினமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்களில் வேகத்தை தவிர்க்கவும். நீங்கள் சிறப்பாக முன்னேற்றம் காண திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழையாமை போக்கை கண்டு கோபமடைவீர்கள்.

உங்கள் துணையிடம் நீங்கள் குழப்பமான உணர்வுகளை ஏற்படுத்துவீர்கள். இத்தகைய உணர்வை தவிர்த்து நீங்கள் அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்.அவ்வாறு நடக்காத பட்சத்தில் சூழ்நிலை பாதிக்க வாய்ப்புள்ளது.

இன்று நிதிநிலைமை திருப்திகரமானதாக இருக்காது. இன்று தேவையில்லாத செலவுகள் காணப்படும்.




இன்று உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை பெறுகும். உங்கள் கனவுகள் அனைத்தும் பூர்த்தி ஆகும்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறனை உங்கள் திறமைகள் மூலம் நிரூபிப்பீர்கள். பணியிடத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பணப்புழக்கம் போதிய அளவில் காணப்படும். எதிர்பாராத பண வரவிற்கான வாய்ப்புகள் அதிகம்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




தேவையற்ற விளைவுகளை தடுக்க எந்த செயலையும் தொடங்குமுன் நன்றாக யோசித்து செயல்பட வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதம் காணப்படும். இன்றைய செயல்களை மேற்கொள்ள பொறுமை தேவை.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணிகள் அதிகமாக காணப்படும். சவால்களை சந்திக்க நீங்கள் உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்பத்தின் சில பிரச்சினை காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக ஆலோசிப்பீர்கள். இதன் மூலம் சில விஷயங்களை சுமூகமாக தீர்த்துக் கொள்ளலாம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park







# கடத்தப்பட்ட 4 மாடுகள் மண்டைதீவில் சிக்கின

(லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.23

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பட்டா ரக வாகனத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்ட 4 மாடுகள் மண்டைதீவுக் காவலரணில் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தை வழி மறித்து சோதனையிட்ட சமயமே நான்கு மாடுகளும் மீட்கப்பட்டதோடு அவற்றைக் கடத்திச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கடத்தலிற்குப் பயன்படுத்திய வாகனமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.




## 'ஹரக் கட்டா'வுக்கு உதவிய முன்னாள் சிப்பாய் கைது!

"ஹரக் கட்டா"வைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்பில் இருந்து விடுவிப்பதற்கான திட்டத்தைத் தீட்டிய சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை, கொடகம பிரதேசத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் 33 வயதான முன்னாள் இராணுவச் சிப்பாயே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.






## யாழில் வீடுகளின் குளியறைகளுக்குள் கமரா பொருத்தியவர் விளக்கமறியலில்

(எஸ்.நிதர்ஷன்)

வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து குளியலறைக்குள் கமரா பொருத்தி வீடியோக்களை எடுத்து வீட்டாரை மிரட்டி வந்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடுகளுக்குள் இரவு வேளைகளில் அத்துமீறி நுழைந்து குளியறைகளில் கமராக்களைப் பொருத்தி வீடியோ எடுத்து, இளைஞன் ஒருவர் வீட்டாரை மிரட்டி வந்துள்ளார்.

அது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் சிறுவர் பெண்கள் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த மாவட்ட குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர், அப்பகுதிகளில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் நபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டு, கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில், 14 நாட்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.